இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 136 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 10 – புதன்கிழமை 25 டிசம்பர் 2024 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 136 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 10 - Wednesday 25 December 2024 - Trichy ★★ 10 Pages ₹ 5.00


## தேர்தல் நடத்தை விதிகளில் திருத்தம்:

# மக்களாட்சிக்கு மிகப் பெரும் அச்சுறுத்தல்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.12.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களில் 64 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 400 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் 6 மாவட்டங்களில் 35 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், என மொத்தம் 99 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவிலான கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, டிச. 25-**

**தேர்தல் நடத்தை விதிகளில் செய்யப்பட்டுள்ள ஆபத்தான திருத்தத்தால் மக்களாட்சி முறைக்கு மிகப்பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும், மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசின் அழுத்தத்துக்கு தேர்தல் ஆணையமும் பணிந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது என்றும் குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டன அறிக்கை ஒன்றை தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

தேர்தல் நடத்துவதில் வெளிப்படைத் தன்மையை உத்தரவாதப்படுத்துவதற்காக தேர்தல் ஆணையம் ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளுடன் கருத்துக்கள் பெற்று, மின்னணு சாதனங்களையும், வீடியோக்களையும், மின்னணு பதிவுகளையும் அரசியல் கட்சிகளும், அவைகளின் வேட்பாளர்களும் பயன்படுத்த அனுமதித்திருந்ததை தடுத்திடும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இப்போது தேர்தல் நடத்தை விதிகளில் சில திருத்தங்களைக் கொண்டு வர முன்மொழிந்து தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரைத்து அனுப்பியுள்ளது.

அதற்குத் தேர்தல் ஆணையமும் ஒப்புதல் அளித்துள்ளது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தன்னிச்சையாக செயல்பட வேண்டிய இந்தியத் தேர்தல் ஆணையம் மோடி அரசின் ஜனநாயகத்திற்கு எதிரான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருப்பது கடும் கண்டனத்திற்குள்ளாகி உள்ளது.

இது தொடர்பான கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தமது கடும் கண்டனத்தை சமூகவலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

அது வருமாறு:-

**வெளிப்படைத்தன்மை கொண்ட தேர்தல் முறையை ஒழிக்கும் வகையில் தேர்தல் நடத்தை விதிகள் 93 (2) (அ)-இல் செய்யப்பட்டுள்ள ஆபத்தான திருத்தத்தால்**


தொடர்ச்சி 4ஆம் பக்கம்


## அனைத்து மக்களும்

# ஒற்றுமையாக - சமத்துவமாக வாழும் நாள் வந்தே தீரும்!

## ‘அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழா’வில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச.25-**

**சென்னை – பெரம்பூரில் உள்ள தொன் போஸ்கோ பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் மாலை கழகச் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் சார்பில் நடைபெற்ற ‘அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழா 2024’-இல் கலந்துகொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், “மதச்சார்பின்மையையும் – மத நல்லிணக்கத்தையும் விரும்பும் மக்கள் அனைவரும் சகோதர உணர்வுடன் உங்களுக்குத் துணை இருக்கிறோம்! நாடு நல்லவர்களின் கைகளில் பாதுகாப்பாக இருக்கும்! அனைத்து மக்களும் ஒற்றுமையாக – சமத்துவமாக வாழும் நாள் வந்தே தீரும்!” என்று குறிப்பிட்டார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உரை வருமாறு :-**

அனைவருக்கும் முதலில் என்னுடைய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### சிறுபான்மை மக்கள் மீதான தி.மு.க.வின் அக்கறை – அரவணைப்பு!

ஒவ்வொரு சொல்லிலும் அரசியல் இருக்கிறது. ஆனால், நான் அரசியல் பேசவில்லை… அரசியல் பேசவில்லை என்று நம்முடைய ஆணையத் துணைத் தலைவர் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால், ஒவ்வொரு சொல்லிலும் அரசியல் இருக்கிறது. நாம் தேர்ந்தெடுக்கும் சொற்களே, நாம் எந்த அரசியல் பேசுகிறோம் என்பதைச் சொல்லிவிடும். நமக்குப் புரியாவிட்டாலும், இப்போது மக்களுக்கு நன்றாகப் புரியும்; எந்த நோக்கத்துக்காக உழைக்கிறோம் என்று அது வெளிப்படுத்தும். அப்படித்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் பல்வேறு சார்பு அணிகளில், இந்தச் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவும் ஒன்று. ஒன்றை நீங்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும். இந்த அணிக்கு சிறுபான்மையினர் பிரிவு என்று பெயர் வைக்காமல், சிறுபான்மையி னர் நல உரிமைப் பிரிவு என்று பெயர் வைத்திருக்கிறோம். அதுதான் முக்கியம். இதில் இருந்தே, சிறுபான்மை மக்கள் மீதான திராவிட முன்னேற்றக் கழகத்தின் அக்கறையையும், அரவணைப்பையும் அனைவரும் உணரலாம். சிறுபான்மை மக்களுக்கு துரோகங்களைச் செய்துவிட்டு, வாக்கு அரசியலுக்காகச் சிறுபான்மை மக்களுடைய நண்பர்கள்போல் நடிப்பவர்கள் இந்த நாட்டில் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்கள் யார் என்று பெயர் சொல்லி நான் அடையாளப்படுத்தித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டும் என்று அவசியமில்லை. உங்களுக்கே நன்றாகத் தெரியும்.




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.12.2024) சென்னை, பெரம்பூர், டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில், திராவிட முன்னேற்றக் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன், ஆவடி சா.மு. நாசர், மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், இ.கருணாநிதி, மேனாள் நீதியரசர் அக்பர் அலி, தமிழ்நாடு சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் ஜோ.அருண், இந்து சமய அறநிலையத் துறை உயர்நிலைக் குழு உறுப்பினர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் செயலாளர் சுபேர்கான், சி.எஸ்.ஐ. சென்னை பேராயத்தின் பொறுப்பு பேராயர் சர்மா நித்தியானந்தம், இந்திய சுவிசேஷ திருச்சபை பேராயர் திருமதி கதிரொளி மாணிக்கம், டான்போஸ்கோ பள்ளி தாளாளர் அருட்தந்தை மரிய ஆரோக்கியம் கனகா, தமிழ்நாடு மாநில சிறுபான்மயினர் ஆணையத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மதநல்லிணக்கம் விரும்பும் அனைவரும் சகோதர உணர்வுடன் துணை இருக்கிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொருத்தவரைக்கும், இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகமாக வாழும் மக்கள் அனைவரும், பெரும்பான்மையில் சொற்பமான சிலர் விதைக்கும் வெறுப்பு அரசியலுக்கு அஞ்சக் கூடாது; மதச் சார்பின்மையையும் – மத நல்லிணக்கத்தையும் விரும்பும் மக்கள் அனைவரும் சகோதர உணர்வுடன் உங்களுக்குத் துணை இருக்கிறோம் என்பதை வெளிப்படுத்தும் இயக்கம்தான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

சிறுபான்மையினர் நலனில் உண்மையான அக்கறை கொண்டுள்ள இயக்கம்! இங்கே நம்முடைய ஆணையத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, அழகாக குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

***நல்லிணக்க இந்தியாவில் பிளவுவாத சக்திகளுக்கு ஒருபோதும் இடமில்லை. அதனால்தான், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் பா.ஜ.க.வுக்குப் பெரும்பான்மை பலத்தை அளிக்கவில்லை. ஆனாலும் அவர்கள் திருந்தவில்லை! அதுதான் வருத்தமாக இருக்கிறது.***


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்